அவர்களின் வேண்டுகோளையும் இணைத்து, நான் துணை வினாக்களை அனுமதிப்பது என்று மறு முடிவு எடுத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துணை வினாக்களை அனுமதிப்பேன். ஆனால், அனைத்து உறுப்பினர்களும் ஓர் எல்லைக்குள் நின்று, இந்த அவையை நடத்துவதற்கு எனக்கு உதவி செய்வீர்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். அதனடிப்படையிலே, வினாக்களை எடுத்துக்கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

181—

அடுக்குமாடி குடியிருப்புகள்

***25992—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதியில் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு ஊழியர்களுக்கு அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு திருவிடைமருதூர் தொகுதியில் வாரிய வசம் நிலம் ஏதும் தற்சமயம் கைவசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்*

2018 ஜூன் 13]

அவர்களே, வாழும் வள்ளுவராய் வாழும் தலைவர் கலைஞர் அவர்களையும், நான்காம் தலைமுறையின் தலைமகன் செயல் தலைவர் தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, நகராட்சிகள் இல்லாமல் ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் மட்டும் இருக்கக்கூடிய கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். திருவிடைமருதூர் பேரூராட்சி, திருபுவனம் பேரூராட்சி, ஆடுதுறை பேரூராட்சி என்று மூன்று பேரூராட்சிகள் ஒட்டிப் பிறந்த குழந்தைகளாக இருக்கிற காரணத்தால், ஒரு நகராட்சியைப்போல் இருக்கிறது. திருவிடைமருதூரில், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகம்; ஆடுதுறையில் நெல் ஆராய்ச்சி மையம்; திருபுவனத்தில், சிட்கோ நிறுவனம் போன்ற அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் உள்ளன. இதனால் அங்கு அரசு ஊழியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், அங்கு குடியிருப்புகள் இல்லை. திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் ஒன்றுபட்ட வட்டமாக இருந்தபொழுது, திருவிடைமருதூரில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள், கும்பகோணத்தில் தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டுள்ள அரசு குடியிருப்பில் இருந்தார்கள். தற்போதும் அங்குதான் இருக்கிறார்கள். திருவிடைமருதூர் தனி வட்டமாக பிரிக்கப்பட்ட பிறகு, அங்குள்ள அரசு ஊழியர்கள் திருவிடைமருதூரில் தனியாக இருப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள்.

எனவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, திருவிடைமருதூரில் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் மாவட்டத் தலைநகரம் அல்லது வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையிடம் ஆகிய இடங்களில்தான் கட்டப்பட்டு வருகின்றன. திருவிடைமருதூர், ஒரு தேர்வுநிலை பேரூராட்சியாகும்.*

முற்பகல் 10—05

[2018 ஜூன் 13

திருவிடைமருதூர் பகுதி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தை (RDO) தலைமையிடமாகக் கொண்டிருக்கவில்லை. மேலும், அங்குள்ள அரசு ஊழியர்களிடத்திலிருந்தும் வாடகைக் குடியிருப்புகள் கோரி போதிய கேட்பு மனுக்கள் வரப்பெற வில்லை. மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் திருவிடைமருதூரில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு வாரியத்தின் வசம் தற்போது நிலம் இல்லை. தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,396 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் உள்ளன. அதில் தஞ்சாவூரில் 1,048, கும்பகோணத்தில் 132, பட்டுக்கோட்டையில் 216 குடியிருப்புகள் என அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் காலியாக உள்ள 175 குடியிருப்புகளில், 89 வீடுகள் குடியிருக்கத் தகுதி உள்ளவை என்று அறியப்பட்டுள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் திருவிடைமருதூருக்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பகோணத்தில் மொத்தமுள்ள 132 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளில் 125 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதம் காலியாக உள்ள 7 வீடுகளில், 4 வீடுகள் குடியிருக்கத் தகுதி உடையதாக இருக்கின்றன. அந்த வீடுகளை இன்னும் யாரும் கேட்கவில்லை. எனவே, தற்போதைய நிலையில் திருவிடைமருதூரில் புதிய குடியிருப்புகளைக் கட்ட வேண்டிய அவசியம் அதற்கான கருத்துரு எதுவும் இல்லை. வாரியத்திடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர், கோவிந்தகுடி ஊராட்சியில் அரசு அலுவலகங்கள் நிறைந்த வளாகம் இருக்கின்றது. வட்டார சத்துணவு ஒருங்கிணைப்பாளர் அலுவலகம், வேளாண்மைத் துறையினுடைய உதவி இயக்குநர் அலுவலகம், பொதுப் பணித் துறையினுடைய உதவி செயற் பொறியாளர் அலுவலகம் மற்றும் நில வள வங்கி ஆகியவை உள்ள அந்த அரசு அலுவலக வளாகத்தில் போதிய காலி இடமும் இருக்கின்றது. அந்த இடத்தில் அரசு ஊழியர்குடியிருப்பிற்கென அடுக்குமாடிக் கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதோடு 2017–2018 ஆம் ஆண்டில் 4,746 வீடுகள் கட்டித் தரப்படும் என அறிவித்தீர்கள்.*

2018 ஜூன் 13]

இப்போது இந்த ஆண்டில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டித் தருவதாகவும் அறிவித்திருக்கின்றீர்கள். 20,000 வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்கின்றபோது, என்னுடைய தொகுதிக்கு 100 வீடுகளையாவது கட்டித் தருவீர்களா என்பதை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆயிரம் வீடுகளைக் கட்டித் தருவதாக அறிவித்தோம். அதற்கான பூர்வாங்கப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருவிடைமருதூரில் அரசு ஊழியர்களிடம் கருத்து கேட்கப்பட்டு, அவர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் தேவை என்ற நிலை அங்கு அதிகமாக இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலம் இருப்பதாகச் சொல்கிறார்கள், அரசு சார்பில் நிலம் இல்லையென்றாலும், அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி, அரசு வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட, கண்ணகி நகர், பெரும்பாக்கம் பகுதிகளில் குடியிருப்புகளைக் கட்டி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட கட்டடங்களில் சென்னையில் வாழ்கின்ற மக்கள் எல்லாம் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு எந்த அடிப்படை வசதியும் செய்து தராமல், பல்லாயிரக்கணக்கான வீடுகளில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு நிலைமை உள்ளது. அங்கு 2—3 நாட்களாக சரியான முறையில், குடிநீர் வராமல் அந்த மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தெருவிளக்குகள் இன்னமும் பொருத்தப்படவில்லை. அங்குள்ள கால்வாய்கள் இன்றைக்கும் திறந்தவெளிக் கால்வாய்களாக இருக்கின்றன. குப்பையை எடுப்பதற்குக்கூட சரியான*

ஆட்கள் இல்லாததால், சுகாதாரம் இல்லாமல், மக்கள் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே வாழ்கின்ற நிலையில், அவர்கள் இறந்தால் அங்கே இந்து, முஸ்லிம், கிறித்துவர்கள் என்ற அளவில் சுடுகாட்டினைப் பயன்படுத்துவதற்குக்கூட, அவர்களுக்கு சுடுகாடுகள் அமைத்துத் தரப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்ற அந்த இடத்தில் அவர்கள் குடியமர்த்தப்பட்டு ஒரு வாரம் கழித்துதான் மின்சாரம் வழங்கப்பட்டது. அந்தப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் உடனடியாக ஆய்வு செய்து, அங்கே தெரு விளக்கு வசதி மற்றும் சுடுகாட்டு வசதியினை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்துவர்கள் போன்றவர்களுக்கு வழிபாட்டுத் தலங்கள்கூட இல்லை. மேலும், அந்தப் பகுதியில் ஒரு வணிக வளாகம்கூட வரவில்லை. அவர்களுக்கென்று உள்ள சமூக நலக் கூடங்களை எல்லாம் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளாக அதிகாரிகளே பயன்படுத்தி வருகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இவற்றை எல்லாம் ஆய்வு செய்து அங்கு வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக ஒரு தீர்வு கண்டிட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துறை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்பாக கேட்கப்பட்ட மூலக் கேள்வியைத் தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குச் சென்றுவிட்டார். சென்னை மாநகரத்தில் இருக்கின்ற குடிசைப் பகுதிகளையெல்லாம் அகற்றிவிட்டு குடிசைப் பகுதிகளற்ற மாநகரமாக, சென்னை மாநகரத்தை உருவாக்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'அனைவருக்கும் வீட்டு

2018 ஜூன் 13]

வசதி' என்ற திட்டத்தை அறிவித்து, அந்தப் பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கரையோரங்களில், குடிசைகளில், சுகாதாரமற்ற நிலையில் வாழ்கின்ற, அடிப்படை வசதிகள் இல்லாத மக்களுக்கு பெரும்பாக்கம் பகுதியில் கிட்டத்தட்ட 20,000 வீடுகளைக் கட்டி அவர்களை அங்கு குடியமர்த்துகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவற்றில் கிட்டத்தட்ட 8,000 வீடுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக இவர்களையெல்லாம் அங்கு கொண்டு போய்ச் சேர்த்து, அவர்கள் வாழ்வதற்குரிய வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது. அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில பராமரிப்புப் பணிகளில் குறைபாடுகள் இருந்தால், மீண்டும் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்த்து, ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அத்துணை அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும். பள்ளிக்கூடம்கூட கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் இந்த நல்ல நேரத்தில் நான் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதம் சம்பந்தப்பட்ட வழிபாடு நடத்துகின்ற இடங்களைப் பொறுத்தவரையில், அவற்றை அரசு கட்டித் தருவதில்லை. அவை, அவரவர் பட்டா நிலங்களில், தனியார்களிடம் இடம் வாங்கி அவர்களாகவே கட்டக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தஞ்சாவூரில் வீடுகள் கட்டப்படுகிறபோது, பெரிய நிலப்பரப்பு உள்ள இடங்களில் இரண்டு அடுக்கு மாடிகள் என்ற அளவிற்குள்தான் கட்டப்படுகின்றன. ஆனால், பல ஏக்கர் நிலத்தில் அவை கட்டப்பட்டிருக்கின்றன. பல அடுக்கு மாடிகளைக் கொண்ட உயரமான கட்டடங்களைக் கட்டிவிட்டால், ஒரு சில ஆயிரக்கணக்கான சதுர அடிகளுக்குள் அந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுவிடும். இதன் காரணமாக, பல இடங்களில் கூடுதல் நிலங்கள் கிடைக்கப்பெற்று அரசாங்கம் அந்த நிலங்களை வேறு காரணங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.*

அப்படியில்லாமல், பல இடங்களில் பல ஏக்கர் நிலங்களிலே ஒரு மாடி, இரண்டு மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டு, பிற தேவைகளுக்கு இடங்கள் இல்லாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதே இடத்தில் 10, 12 மாடிகளைக் கொண்ட கட்டடங்களைக் கட்டி வீடுகளை அமைத்துக்கொண்டால், மற்ற இடங்களை மற்ற வேலைகளுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுகுறித்து, நம்முடைய அரசு சிந்தித்து ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தஞ்சாவூரில் மட்டுமல்ல, பல முக்கிய நகரங்களில் மக்கள் அடர்த்தியாக வசிக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைச் சொல்லி இருக்கிறார்கள். அந்த யோசனை ஏற்கெனவே அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.* Horizontal level–*ல் வீடுகள் கட்டப்படுகின்றபோது, இடங்கள் தள்ளிக்கொண்டே போய்க்கொண்டிருக்கின்றபோது, இடம் இல்லாத சூழ்நிலை மாநகரப் பகுதிகள் மற்றும் முக்கிய நகரங்களில் ஏற்படுகின்றது. அதற்காக, மக்கள் 10 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் என்ற அளவில் வெகுதூரம் செல்லவேண்டிய சூழல் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இப்போது வீட்டு வசதி வாரியம்* vertical line–*ல் பல அடுக்குமாடி வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறது. இந்த இடங்களில் மக்களைக் குடியமர்த்துகின்ற நிலையில் அதிகமான மக்கள் ஒரே இடத்தில் குடியிருப்பதற்கு வசதிகள் ஏற்படும். அந்தக் கருத்தினை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்த நடைமுறை, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*